## ஆண்டாள் அருளிச் செய்த
## நாச்சியார் திருமொழி

---

### நாச்சியார் திருமொழித் தனியன்கள்
### திருக்கண்ணமங்கையாண்டான் அருளிச் செய்தது

அல்லி நாள் தாமரை மேல் ஆரணங்கின் இன்துணைவி *
மல்லி நாடாண்ட மடமயில் - மெல்லியலாள் *
ஆயர் குல வேந்தன் ஆகத்தாள் * தென் புதுவை
வேயர் பயந்த விளக்கு

---

## ஆண்டாள் அருளிச் செய்த
## நாச்சியார் திருமொழி

### முதல் திருமொழி - தையொரு திங்களும்
### கண்ணனோடு கூட்டும்படி காமனைத் தொழுதல்

** தையொரு திங்களும் தரை விளக்கித் *
தண் மண்டலம் இட்டு மாசி முன்னாள் *
ஐய நுண்மணற் கொண்டு தெருவணிந்து *
அழகினுக்கலங்கரித்து அனங்க தேவா! **
உய்யவும் ஆங்கொலோ என்று சொல்லி *
உன்னையும் உம்பியையும் தொழுதேன் *
வெய்யதோர் தழல் உமிழ் சக்கரக் கை *
வேங்கடவற்கென்னை விதிக்கிற்றியே 1

வெள்ளை நுண்மணற் கொண்டு தெருவணிந்து *
வெள்வரைப்பதன் முன்னம் துறை படிந்து *
முள்ளும் இல்லாச் சுள்ளி எரி மடுத்து *
முயன்றுன்னை நோற்கின்றேன் காம தேவா! **
கள்ளவிழ் பூங்கணை தொடுத்துக் கொண்டு *
கடல்வண்ணன் என்பதோர் பேர் எழுதி *
புள்ளினை வாய் பிளந்தான் என்பதோர் *
இலக்கினில் புகவென்னை எய்கிற்றியே 2

மத்த நன்னறுமலர் முருக்கமலர்
கொண்டு * முப்போதும் உன்னடி வணங்கி *
தத்துவம் இலி என்று நெஞ்செரிந்து *
வாசகத்தழித்து உன்னை வைதிடாமே **
கொத்தலர் பூங்கணை தொடுத்துக் கொண்டு *
கோவிந்தன் என்பதோர் பேர் எழுதி *
வித்தகன் வேங்கடவாணன் என்னும் *
விளக்கினில் புகவென்னை விதிக்கிற்றியே 3

சுவரில் புராண! நின் பேர் எழுதிச் *
சுறவ நற்கொடிக்களும் துரங்கங்களும் *
கவரிப் பிணாக்களும் கருப்பு வில்லும் *
காட்டித் தந்தேன் கன்டாய் காம தேவா! **
அவரைப் பிராயம் தொடங்கி * என்றும்
ஆதரித்தெழுந்த என் தடமுலைகள் *
துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத் *
தொழுது வைத்தேன் ஒல்லை விதிக்கிற்றியே 4

வானிடை வாழும் அவ்வானவர்க்கு *
மறையவர் வேள்வியில் வகுத்த அவி *
கானிடைத் திரிவதோர் நரி புகுந்து *
கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப **
ஊனிடை ஆழி சங்கு உத்தமர்க்கென்று *
உன்னித்தெழுந்த என் தடமுலைகள் *
மானிடவர்க்கென்று பேச்சுப்படில் *
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே! 5

உருவுடையார் இளையார்கள் நல்லார் *
ஓத்து வல்லார்களைக் கொண்டு * வைகல்
தெருவிடை எதிர் கொண்டு * பங்குனி நாள்
திருந்தவே நோற்கின்றேன் காம தேவா! **
கருவுடை முகில்வண்ணன் காயாவண்ணன் *
கருவிளை போல் வண்ணன் * கமல வண்ணத்
திருவுடை முகத்தினில் திருக்கண்களால் *
திருந்தவே நோக்கெனக்கருள் கண்டாய் 6

காயுடை நெல்லொடு கரும்பமைத்துக் *
கட்டி அரிசி அவல் அமைத்து *
வாயுடை மறையவர் மந்திரத்தால் *
மன்மதனே! உன்னை வணங்குகின்றேன் **
தேச முன்னளந்தவன் திரிவிக்கிரமன் *
திருக்கைகளால் என்னைத் தீண்டும் வண்ணம் *
சாயுடை வயிறும் என் தடமுலையும் *
தரணியில் தலைப்புகழ் தரக் கிற்றியே 7

மாசுடை உடம்பொடு தலை உலறி *
வாய்ப்புறம் வெளுத்தொரு போதும் உண்டு *
தேசுடைத் திறலுடைக் காம தேவா! *
நோற்கின்ற நோன்பினைக் குறிக்கொள் கண்டாய் **
பேசுவதொன்றுண்டு இங்கு எம்பெருமான்! *
பெண்மையைத் தலையுடைத்தாக்கும் வண்ணம் *
கேசவ நம்பியைக் கால் பிடிப்பாள்
என்னும் * இப்பேறெனக்கருள் கண்டாய் 8

தொழுது முப்போதும் உன்னடி வணங்கித் *
தூமலர் தூய்த் தொழுதேத்துகின்றேன் *
பழுதின்றிப் பார்க்கடல் வண்ணனுக்கே *
பணி செய்து வாழப் பெறாவிடில் நான் **
அழுதழுது அலமந்தம்மா வழங்க *
ஆற்றவும் அது உனக்குறைக்கும் கண்டாய் *
உழுவதோர் எருத்தினை நுகங்கொடு பாய்ந்து *
ஊட்டம் இன்றித் துரந்தால் ஒக்குமே 9

** கருப்பு வில் மலர்க் கணைக் காம வேளைக் *
கழலிணை பணிந்தங்கோர் கரி அலற *
மருப்பினை ஒசித்துப் புள் வாய் பிளந்த *
மணிவண்ணற்கென்னை வகுத்திடென்று **
பொருப்பன்ன மாடம் பொலிந்து தோன்றும் *
புதுவையர் கோன் விட்டுசித்தன் கோதை *
விருப்புடை இன்தமிழ் மாலை வல்லார் *
விண்ணவர் கோன் அடி நண்ணுவரே 10

**ஆண்டாள் திருவடிகளே சரணம்**

---